# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

## ஹனோவர் தமிழர் இந்து சமயகலாச்சார அமைப்பு

# Sri Muthumari Amman Aalayam

## HANNOVERISCHE TAMILISCHER HINDU-KULTUR VEREIN e. V.

## யாப்பு

§ 1. பெயரும் பதிவு செய்த இடமும்

§ 2. மன்றத்தின் குறிக்கோள்

§ 3. அங்கத்துவம்

§ 4. அங்கத்தவ பங்களிப்பு

§ 5. மன்றத்தின் கருவிகள்

§ 6. பிரதிநிதித்துவம்

§ 7. நிதி

§ 8. அழைப்பிதழ்

§ 9. அறிக்கை

§ 10 தேர்தல்

§ 11. யாப்புமாற்றியமைப்பு

§ 12. பதவி விலக்கல், ஆலோசனைசபை கலைப்பு, நிர்வாகசபை கலைப்பு, கலை, கலாச்சார அபிவிருத்திச்சபை கலைப்பு, நம்பிக்கையில்லாப் பிரேரணை, மன்றக்கலைப்பு

§ 13. பிறவிடயங்கள்

### § 1. பெயரும் பதிவு செய்த இடமும்

1.1 இந்த மன்றம் „ஹனோவர் தமிழர் இந்து கலாச்சார அமைப்பு" என்ற பெயரில் ஹனோவரில் மன்றங்களை பதிவு செய்யும் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு இலக்கம் ஏசு 6748. இம்மன்றம் „ஹனோவர் தமிழர் இந்து சமய கலாச்சார அமைப்பு" என்ற பெயரில் இயங்கும். கடிதத்தலைப்புகளில் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் என்ற பதம் கட்டாயம் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

1.2 இம்மன்றம் ஹனோவர் நகரில் (Carl-Buderus-Str. 3a, 30455 Hannover ) என்ற முகவரியில் இயங்கும்.

1.3 மன்றத்தின் வருட ஆரம்பம் ஐப்பசி மாதமாகவும், வருட இறுதி புரட்டாதி மாதமாகவும் அமையும்.

### § 2. மன்றத்தின் குறிக்கோள்

2.1 இந்து சமயத்தையும், இந்துகலாச்சாரத்தையும் பேணிப்பாதுகாப்பது.

2.2 மன்றத்தினால் அமைக்கப்பட்ட ஆலயத்தை பேணிப்பாதுகாப்பது.

2.3 சிறார்களை ஆன்மீக வழியில் வளர அதற்கேற்ப தேவாரம் ஓதுதல்பற்றிய அறிவுரை வகுப்புகள், இந்து சமய பாட வகுப்புக்கள், பஜனை, கலை, கலாச்சாரநிகழ்ச்சி போன்றவற்றை ஒழுங்கு செய்வது.

2.4 மன்றத்தின் செயற்பாடுகள் அனைத்தும் அரசியல் சார்பற்றதும் ஆலய நன்மை கருதியதாகவும் இந்துசமய வளர்சியை நோக்கியதாகவும் அமைய வேண்டும்.

2.5 மன்றத்திற்கு சேவைமனப்பான்மையுடன் உதவி செய்யும் ஆலோசனைச்சபை அங்கத்தவர்கள், நிர்வாகசபை அங்கத்தவர்கள், கலை, கலாச்சார அபிவிருத்திச்சபை அங்கத்தவர்கள், மற்றும் இதர அங்கத்தவர்கள் அனைவருக்கும் ஊதியம் வழங்கப்படமாட்டாது.

2.6 இம்மன்றம் ஏனைய தொண்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு மன்றத்தின் வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

## § 3. அங்கத்துவம்

3.1 அங்கத்தவர்

3.1.1 ஆலயத்திற்காக நிலம் வாங்க உதவி வழங்கியோர் வழங்குவோர்.

3.1.2 நடப்பு நிர்வாக வருட ஆண்டில் வருடாந்த மகோற்சப காலங்களில் உபயம் செய்வோர்,

3.1.3 நடப்பு நிர்வாக வருட ஆண்டில் விசேட தினங்களில் உபயம் செய்வோர்,

3.1.4 ஆலயத்திற்கு மாதாந்த பங்களிப்பு செய்வோர் அனைவரும் அங்கத்தவர்களாவார்கள்.

(குறிப்பு: மாதாந்தப் பங்களிப்பை வருடம் ஒருமுறையோ 6 மாதத்திற்கொருமுறையோ முன்கூட்டியே பங்களிக்கலாம். மூன்று மாதம் தொடர்ந்து மாதாந்த பங்களிப்பை அளிக்க தவறும் பட்சத்தில் அங்கத்துவத்தை இழக்க நேரிடும்.)

3.2 அங்கத்தவர் 16 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

3.3 இம்மன்றத்தின் முன்னேற்றத்தை ஆதரிப்பவராக இருத்தல் வேண்டும்.

3.4 ஆலய நடைமுறைகளை* ஏற்றுக்கொள்பவராக இருத்தல் வேண்டும்.

3.5 இம்மன்றத்தின் குறிக்கோள்களை ஏற்றுக்கொள்பவராக இருத்தல் வேண்டும்.

3.6 இந்துசமயத்தை சார்ந்தவராகவோ, இந்துசமயத்தை அறிந்தவராகவோ அல்லது இந்துசமயத்தில் நம்பிக்கையுடயவராகவோ இருத்தல் அவசியம்.

3.7 அங்கத்தவர்கள் மட்டுமே வாக்களிக்கத் தகுதியுடையவர்கள். பிரிவு (§ 3) 3 இல் குறிப்பிட்டபடி.

3.8 அங்கத்துவமுடிவு

3.7.1 அங்கத்தவர் இறைவனடி சேர்ந்தால்,

3.7.2 சுயவிருப்பில் எழுத்து மூலம் விண்ணப்பித்தால்,

3.7.3 அங்கத்தவர், ஆலய வளர்ச்சிக்கு இடையூ றாகவும் மன்றத்தின் குறிக்கோளுக்கு எதிராகவும், இருக்கும் பட்சத்தில் நிர்வாகசபையின் பரிந்துரையின் பேரில் ஆலோசனைசபை மற்றும் கலை கலாச்சார சபைகள் கூடும் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அங்கத்தவரை மன்றத்திலிருந்து வெளியேற்ற முடிவெடுக்கப்படும்.

---

*ஆலய நடைமுறைகள் இத்துடன் இனைக்கப்பட்டுள்ளது

## § 4. பங்களிப்பு

4.1 அங்கத்தவர் விரும்பிய வகையில் வருடாந்தம், மாதாந்தம், மகோற்சப தினங்கள், விசேடதினங்கள் அல்லது தினசரி பூ ஜை வேளைகளில் பங்களிப்பை செய்யலாம்.

## § 5. இம்மன்றத்தின் கருவிகள்

5.1 பொதுக்கூட்டம் *

5.2 ஆலோசனைசபை **

5.3 நிர்வாகசபை **

5.4 கலை, கலாச்சார அபிவிருத்திச்சபை **

5.5 நிர்வாகசபையின் மாதாந்தகூட்டம் *

5.1 பொதுக்கூட்டம்

5.1.1 இம்மன்றத்தின் உயர்ந்த கருவியாகக் கருதப்படுவது பொதுக்கூட்டமும், பொதுக்கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களுமே.

5.1.2 மூன்றில் ஒன்று (1/3) அங்கத்தவர்கள் எழுத்துமூலம் நிர்வாகசபையை அல்லது ஆலோசனைசபையை தகுந்த ஆதாரத்துடனும், காரணத்துடனும் கேட்டுக்கொண்டால் நிர்வாகசபை அல்லது ஆலோசனைசபை பொதுக்கூட்டத்தை கூட்ட ஒழுங்கு செய்ய வேண்டும்.

5.1.3 வருடாந்த பொதுக்கூட்டத்தில் கடைப்பிடிக்கும் விடயங்கள்

5.1.3.1 நிர்வாகசபையின் கடந்த ஆண்டின் செயற்பாட்டு அறிக்கையை (செயலாளர் அறிக்கை) சமர்பித்தல் ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளல்,

5.1.3.2 பொருளாளரின் கடந்த ஆண்டின் வரவு செலவு அறிக்கையை சமர்பித்தல் ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளல்,

5.1.3.3 புதிய ஆலோசனைசபையை தெரிவு செய்தல்,

5.1.3.4 புதிய கலை, கலாச்சார அபிவிருத்திசபையை தெரிவு செய்தல்,

5.1.3.5 புதிய நிர்வாகசபையை தெரிவு செய்தல்.

5.1.3.6 நிகழ்ச்சி நிரலில் உள்ள ஏனைய விடயங்கள்

5.1.4 பொதுக்கூட்ட அறிவித்தலில் உள்ள நிகழ்ச்சி நிரலின் படியே கூட்டம் நடாத்தப்பட வேண்டும்.

5.1.5 பொதுக்கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் யாவும் கூட்டத்தில் பங்கு பற்றியவர்களின் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும்.

5.1.6 அங்கத்தவர்கள் அனைவரும் தங்கள் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கூறுவதற்கு உரிமை உண்டு. ஆனால் அவர்கள் கூறப்போகும் விடயத்தை நிகழ்ச்சி நிரலில் சேர்த்து கொள்ளுமாறு 2 வாரங்களிற்குமுன் ஆலோசனைசபைக்கு, அல்லது நிர்வாகசபைக்கு முன்னதாகவே எழுத்து மூலம் அறிவித்து நிகழ்ச்சி நிரலில் இடம்பெறச் செய்யவேண்டும்.

---

*கூட்ட நடைமுறைகள் **சபையின்கடமைகள் இனைக்கப்பட்டுள்ளது

5.1.7 நிகழ்ச்சி நிரலில் இல்லாத அவசியமில்லாத விடயங்கள் பற்றி பேசுவது தவிர்க்கப்பட வேண்டும்.

## 5.2 ஆலோசனைசபை*

5.2.1 ஆலோசனைசபையின் பதவிக்காலம் ஒரு வருடமாகும்.

5.2.2 வருடாந்த பொதுக்கூட்டத்தில் புதிய ஆலோசனைசபை தெரிவு செய்யப்படவேண்டும்.

5.2.3 ஆலோசனைசபையில்

ஆலோசனைசபைத்தலைவர்

மற்றும் 4 அங்கத்தவர்கள் இடம் பெறுவர்

5.2.4 ஆலோசனைசபையில் அங்கம் வகிப்போர் அனுபவமிக்க, ஆன்மீகப் பற்றுள்ளவராகவும், ஆலயத்தினதும், மன்றத்தினதும் முன்னேற்றத்தை மட்டும் கருதுபவரா இருப்பது மட்டுமின்றி பக்கசார்பற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

5.2.5 ஆலோசனைசபை 3 மாதத்திற்கு ஒருமுறை கூடி, நிர்வாகசபையின் வருங்கால திட்டங்களை ஆராய வேண்டும்.

5.2.6 ஆலோசனைசபையின் இரண்டு நிர்வாகிகளேனும் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிர்வாகசபைக்கூட்டத்தில் சமூகமளிக்கவேண்டும். அவசியம் ஏற்படும் பட்சத்தில் தேவைக்கேற்ப அதற்கு முன்னரும் சமூகமளிக்கலாம்.

5.2.6 ஆலோசனைசபை அங்கத்தவர் ஒருவர் ராஜினாமா செய்ய நேர்ந்தால் அல்லது பதவியிழக்கநேர்ந்தால் ஆலோசனைசபை அங்கத்தவரின் வெற்றிடத்திற்கு, ஆலோசனைசபை நிர்வாகசபையின் ஒத்துழைப்புடன் புதிய அங்கத்தவரை நியமிக்கலாம்.

5.2.7 ஆலோசனைசபை அங்கத்தவர் ஒருவர் ராஜினாமா செய்ய நேர்ந்தால் ஒருவாரத்திற்கு முன் எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும். அதேவேளையில் தனது பொறுப்புக்களையும் ஒப்படைக்க வேண்டும்.

5.2.8 வருடாந்த வரவு செலவுக்கணக்கை பொதுக்கூட்டத்திற்கு முன் பரிசீலனை செய்ய வேண்டும்

5.2.9 மன்றத்திற்கு சேவைமனப்பான்மையுடன் உதவி செய்யும் ஆலோசனைச்சபை அங்கத்தவர்கள், நிர்வாகசபை அங்கத்தவர்கள், கலை, கலாச்சார அபிவிருத்திச்சபை அங்கத்தவர்கள் மற்றும் இதர அங்கத்தவர்கள் அனைவருக்கும் ஊதியம் வழங்கப்படமாட்டாது

5.2.10 ஆலோசனைசபையில் பெண்கள் முன்வரும் பட்சத்தில் 20 % பெண்கள் பங்கு பற்றலாம்.

5.3 நிர்வாகசபை

5.3.1 நிர்வாகசபையின் பதவிக்காலம் இரு வருடமாகும்.

5.3.2 வருடாந்த பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவேண்டும். தலைவர்

செயலாளர் பொருளாளர் ஆகியோர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

5.3.3 நிர்வாகசபையில்

தலைவர்**

உபதலைவர்

---

*ஆலோசனைசபையின் நடைமுறைகள் 14.06.2009 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தலைவரின் கடமைகள் இனைக்கப்பட்டுள்ளது

செயலாளர்*

உபசெயலாளர்

பொருளாளர்*

உபபொருளாளர்

மற்றும்

நிர்வாகசபை அங்கத்தவர்கள் மொத்தம் 11 பேர் நிர்வாகசபையில் இடம் பெறுவர்

5.3.4 ஆலயபரிபாலனம், ஆலயநிதி திட்டமிடல், ஆலயக்குருக்கள் நியமனம், ஆலயக்குருக்களின் கடைமைகளை** நிர்னயித்தல், நாளாந்த வரவு செலவு, நிதிதிரட்டல், ஆலய திருத்த வேலைகள் போன்றவை நிர்வாகசபையின் முக்கிய கடமைகள்*** ஆகும்.

5.3.5 நிர்வாகசபையின் சுயாதீன தன்மையில் தலையிட ஆலோசனைசபைக்கோ, கலை கலாச்சார அபிவிருத்தி சபைக்கோ அதிகாரமில்லை.

5.3.6 நிருவாகசபை அங்கத்தவர் ஒருவர் ராஜினாமா செய்ய நேர்ந்தால் நான்கு வாரத்திற்கு முன் எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும். அதேவேளையில் தனது பொறுப்புக்களையும் ஒப்படைக்க வேண்டும்.

5.3.7 மூன்று நிர்வாகசபைக்கூட்டங்களிற்கு தொடர்ந்து எவ்வித முன் அறிவித்தலுமின்றி சமூகமளிக்க தவறும் பட்சத்தில் அந்த நிர்வாகி நிர்வாகசபையில் இருந்து விலகியவராக கருதப்படுவார்.

5.3.8 ஆலாசனைசபையின் அனுமதியுடன் நிர்வாகசபை பிரதான நிர்வாகியின் வெற்றிடத்திற்கு புதிய நிர்வாகியை நியமிக்க நிர்வாகசபைக்கு உரிமை உண்டு.

5.3.9 மன்றத்திற்கு சேவைமனப்பான்மையுடன் உதவி செய்யும் ஆலோசனைச்சபை அங்கத்தவர்கள், நிர்வாகசபை அங்கத்தவர்கள், கலை, கலாச்சார அபிவிருத்திச்சபை அங்கத்தவர்கள் மற்றும் இதர அங்கத்தவர்கள் அனைவருக்கும் ஊதியம் வழங்கப்படமாட்டாது

5.3.10 நிர்வாகசபையில் பெண்கள் முன்வரும் பட்சத்தில் 20 % பெண்கள் பங்கு பற்றலாம்.

5.4 கலை, கலாச்சார அபிவிருத்திச்சபை

5.4.1 கலை, கலாச்சார அபிவிருத்திச்சபையின் பதவிக்காலம் ஒரு வருடமாகும்.

5.4.2 வருடாந்த பொதுக்கூட்டத்தில் புதிய கலை கலாச்கார அபிவிருத்திச்சபை தெரிவு செய்யப்படவேண்டும்.

5.4.3 கலை, கலாச்சார அபிவிருத்தி சபையில் கடமை பொறுப்பு அனுபவம் ஆன்மீக சிந்தனை உடையவர்கள் பங்கு பெற வேண்டும்.

5.4.4 கலை, கலாச்சார பொறுப்பாளர் மற்றும் நிருவாகிகள் 2 பேர் இடம் பெறுவர்.

5.4.5 சிறுவர்களின் ஆன்மீகம், கலை, கலாச்சார வளர்ச்சி, பஜனை, சமய வகுப்புக்கள், கலாச்சார நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல் போன்றவை கலை, கலாச்சார அபிவிருத்திச்சபையின் முக்கிய கடமைகள் ஆகும்.

---

*செயலாளர் பொருளாளரின் கடமைகள் - **ஆலய குருக்களின் கடமைகள் - ***நிர்வாகசபையின் கடமைகள் இனைக்கப்பட்டுள்ளது

5.4.6 கலை, கலாச்சார அபிவிருத்திச்சபை இரண்டு மாதத்திற்கு ஒருமுறை கூடி, தங்கள் வருங்கால திட்டங்களை ஆராய வேண்டும். தேவை ஏற்படின் நிர்வாகசபையின் மாதாந்த கூட்டத்தில் கலந்து கொண்டு தேவையான நிதி மற்றும் இதர தேவைகள் பற்றி கலந்துரையாடலாம்.

5.4.7 ஆலோசனைசபை மற்றும் நிர்வாகசபையினரின் அனுமதியுடன் கலை கலாச்சார அபிவிருத்திச்சபை அங்கத்தவரின் வெற்றிடத்திற்கு புதிய அங்கத்தவரை நியமிக்க கலை கலாச்சார அபிவிருத்திச்சபைக்கு உரிமை உண்டு.

5.4.8 மன்றத்திற்கு சேவைமனப்பான்மையுடன் உதவி செய்யும் ஆலோசனைச்சபை அங்கத்தவர்கள், நிர்வாகசபை அங்கத்தவர்கள், கலை, கலாச்சார அபிவிருத்திச்சபை அங்கத்தவர்கள் மற்றும் இதர அங்கத்தவர்கள் அனைவருக்கும் ஊதியம் வழங்கப்படமாட்டா.

5.4.9 கலை கலாச்சார அபிவிருத்திசபையில் பெண்கள் முன்வரும் பட்சத்தில் 20 % பெண்கள் பங்கு பற்றலாம்.

5.5 நிர்வாகசபையின் மாதாந்தகூட்டம். *

5.5.1 நிர்வாகசபை மாதத்திற்கு ஒருமுறையும், அவசியம் ஏற்படும் பட்சத்தில் தேவைக்கேற்ப அதற்கு முன்னரும் கூடலாம்.

5.5.2 நிர்வாகசபை மாதாந்த கூட்டத்தில் தேவை ஏற்படின் ஆலோசனைசபை அங்கத்தவர்கள் கலந்து கொண்டு ஆலோசனை கூறலாம்.

5.5.3 நிர்வாகசபையின் கன்னி அமர்வில் ஆலோசனைசபையினரும், கலை கலாச்சார அபிவிருத்திசபையினரும் கட்டாயம் பங்கு பற்ற வேண்டும்.

5.5.4 மாதாந்த கூட்ட நிகழ்ச்சிநிரலில் சென்ற மாத கூட்டத்தின் செயலாளர் அறிக்கை, பொருளாளரின் வரவு செலவு அறிக்கை, வரும் மாதத்திற்கான செயற்பாடுகள் போன்றவை கட்டாயமாக உள்ளடக்கப்பட வேண்டும்.

5.5.5 சகல செலவிற்கான பற்றுச்சீட்டுக்களும் அடுத்து வரும் நிர்வாகசபை கூட்டத்தில் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5.5.6 நிர்வாகசபையினர் ஆலயவிதிமுறைகளை கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டும்.

## § 6. பிரதிநிதித்துவம்

6.1 மன்றத்தின் பிரதிநிதி நிர்வாகசபைத் தலைவராவார். அவர் சமூகமளிக்காத பட்சத்தில் நிர்வாகசபை உபதலைவர் பொறுப்பேற்கும் பிரதிநிதி ஆவார்.

6.2 தலைவர் நிர்வாகசபைக் கூட்டத்திற்கு சமூகமளிக்காத பட்சத்தில் உபதலைவர் கூட்டத்தை நடத்தலாம்.

6.3 உபதலைவரும் நிர்வாகசபைக் கூட்டத்திற்கு சமூகமளிக்காத பட்சத்தில் செயலாளர் கூட்டத்தை நடத்தலாம்.

6.4 வரவு செலவு கணக்குகள் பொருளாளரால் சமர்பிக்கப்பட வேண்டும். அவர் சமூகமளிக்காத பட்சத்தில் உபபொருளாளர் சமர்பிக்கலாம்.

## § 7. நிதி

### 7.1 நிதி சேகரித்தல்

7.1.1 அங்கத்தவர்களின் மாதாந்த, வருடாந்த பங்களிப்பு, அங்கத்தவர்களின் நன்கொடை, மகோற்சப காலங்களில் உபயம் செய்வோர், விசேடதினங்களில் அபிசேகம் செய்வோர் ஆலயத்தின் காணி வாங்குவோர், மூலம் பெறப்படும் நிதி.

7.1.2 பக்தர்கள் மூலம் அபிசேகம், உண்டியலில் செலுத்தும் காணிக்கை, போன்றவற்றால் பெறப்படும் நிதி. உண்டியல் வருடம் (2) இருமுறை மாசி மாதத்திலும் புரட்டாதி மாதத்திலும் ஆலோசனைசபையும் நிர்வாகசபையும் சேர்ந்து திறக்க வேண்டும். உண்டியலால் பெறப்படும் பணம் அபிவிருத்தி வேலைகளிற்கு மட்டுமே பயன் படுத்தப்பட வேண்டும்.

7.1.3 நிறுவனங்கள், மன்றங்கள் நன்கொடைகள் மூலம் பெறப்படும் நிதி.

7.1.4 நிதி சேகரித்தலும், மன்றத்திற்கும் - ஆலயதேவைகளிற்குமான செலவை திட்டமிடுதலும் நிர்வாகசபைக்கு மட்டுமே உரிமையுண்டு. அதை பரீசீலனை செய்யும் உரிமை ஆலோசனை சபைக்கு உண்டு.

7.1.5 வங்கிப்பதிவுகளில் மாற்றம் செய்யப்பட வேண்டிய பத்திரங்களில் தலைவர் செயலாளர் பொருளாளர் மூவரின் கையொப்பம் இடவேண்டியது அவசியமாகும்.

### 7.2 செலவு

7.2.1 நாளாந்த பூ ஜைக்காக ஏற்படும் செலவுகள்

7.2.2 மாதாந்த பராமரிப்பு செலவுகள்

7.2.3 அத்தியாவசியமான தேவைகளிற்கான செலவுகள்

7.2.4 குருக்களின் சம்பளம்

7.2.5 மகோற்சப காலங்களிலும், விசேடதினங்களிலும் இசை கலைஞர்களிற்கான சம்பளம்

7.2.6 ஆலய புனருத்தாரன வேலைகளிற்கான செலவுகள்.

7.2.7 கலை கலாச்சார நிகழ்சிகளிற்கான செலவுகள்.

7.2.8 நிதியின் வரவு செலவு கணக்குகள் யாவும் பொருளாளரினால் மட்டுமே நிர்வாகசபையிலோ அல்லது பொதுக்கூட்டத்திலோ சமர்பிக்கப்பட வேண்டும். பொருளாளர் சமூகமளிக்காத பட்சத்தில் உபபொருளாளர் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கு முழுப்பொறுப்பும் பொருளாளரே.

7.2.9 இந்த மன்றத்தை வந்தடையும் நிதிகள் யாவும் வழிபாட்டுத்தலத்தின் செலவுகளுக்காகவும், ஆலய அத்தியாவசிய பராமரிப்பு தேவைகளிற்காகவும், ஆலய புனருத்தாரன செலவுகளிற்காகவும், கலை கலாச்சார அபிவிருத்தி செலவுகளுக்காகவும், நலன்புரி திட்டங்களின் தேவைகளிற்காகவும் மன்றத்தின் விதிகளிற்கமய செலவிடப்பட வேண்டும்.

7.2.10 மன்றத்தின் செலவுகளிற்காக பொருளாளர் நாளாந்த செலவு தவிர்த்து வாரம் 300 € வரை செலவு செய்யலாம். 400 € முதல் 500 € வரை தலைவர் அல்லது செயலாளரின் அனுமதியுடன் செலவு செய்யலாம். 500 € முதல் 800 € வரை தலைவரின் அனுமதியுடன் செலவு செய்யலாம். 800 € முதல் 1000 € வரை செலவு செய்ய வேண்டுமாயின் நிர்வாகசபையின் அங்கீகாரத்தை பெறவேண்டும். 1000

€ மேல் செலவு ஏற்படுமாயின், ஆலோசனைசபையின் அங்கீகாரத்தை பெறவேண்டியது அவசியமாகும்.

7.2.11 பெரும் கொள்முதல்கள் மன்றத்தின் சார்பில் யாரும் வாங்கமுடியாது.

7.2.12 ஆலயத்திற்காக சேர்க்கப்படும் சகல பொருட்களும் ஆலயத்தில் மட்டுமே களஞ்சியப்படுத்தப்பட வேண்டும்.

## § 8. அழைப்பிதழ்

8.1 பொதுக் கூட்டம் வருடத்தில் ஒருமுறை நடைபெற வேண்டும்.

8.2 கூட்டங்களுக்கான அறிவித்தல்கள் நான்கு (4) (12) வாரங்களுக்கு முன் பொதுஅறிவித்தல் மூலம் நடைபெறும் இடம், நேரம், நிகழ்ச்சிநிரல் போன்றவை அறிவிக்கப்பட வேண்டும்.

8.3 அவசரக்கூட்டங்களுக்கு ஏழு (7) நாட்களுக்கு முன் அறிவிக்கப்பட வேண்டும்.

8.4 அழைப்புக்கள் தபால் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கலாம்.

## § 9. அறிக்கை

9.1 ஒவ்வொரு நிர்வாகசபைகூட்டத்தினதும், பொதுக்கூட்டத்தினதும் அறிக்கைகளை அடுத்துவரும் கூட்டத்தில் செயலாளர் அல்லது உபசெயலாளர் வாசிக்க வேண்டும். அறிக்கை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் நிர்வாகசபை அங்கத்தவர்கள் இருவர் கையொப்பமிடல் வேண்டும்

9.2 சகல கூட்டங்களின் போதும் சமூகமளிப்போரின் வரவை உறுதிப்படுத்த சகலரும் கையொப்பமிட வேண்டும்.

9.3 வரவு செலவு அறிக்கைகளை கூட்டத்தில் பொருளாளர் அல்லது உபபொருளாளர் சமர்ப்பிக்க வேண்டும்.

9.4 சகல அறிக்கைகளும் பதிவேடுகளும் ஆலயத்தில் வைத்து பராமரிக்கப்பட வேண்டும்.

9.5 ஆலயத்தில் ஆலயத்திற்கு சொந்தமான பொருட்களின் பதிவேடு ஒன்று பராமரிக்கப்பட்டு நிர்வாகம் மாறும் போது சரிபார்க்கப்பட்டு புதிய நிர்வாகசபையினரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

9.6 ஆலயத்தில் ஆலயத்திற்கு சொந்தமான ஆபரணங்களின் பதிவேடு ஒன்று பராமரிக்கப்பட்டு நிர்வாகம் மாறும் போது சரிபார்க்கப்பட்டு புதிய நிர்வாகசபையினரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

## § 10 தேர்தல் *

தலைவர், செயலாளர், பொருளாளர், ஆகியோரிற்கான தேர்தல் ஜனநாயக முறைப்படி ஜேர்மன் தேர்தல் சட்ட விதிமுறைக்கமைய சகல அங்கத்தவர்களும் வாக்களிக்கக்கூடிய முறையில் 2 வருடங்களிற்கொருமுறை நடைபெறும்.

10.2 ஆலோசனைசபை தேர்தல் குழுவாக செயற்படும்.

10.3 தேர்தலில் ஆலய யாப்பு § 3.1 இல் குறிப்பிட்டபடி நிரந்தர அங்கத்தவர்கள் மட்டும் வாக்களிக்கலாம்.

10.4 நிரந்தர அங்கத்துவ குடும்பத்தை சேர்ந்த தம்பதியர்களிற்கும் 16 வயதிற்கு மேற்பட்ட(திருமணமாகாத) பிள்ளைகளிற்கும் தனித்தனியான வாக்குரிமை உண்டு.

10.5 தேர்தல் நடைமுறை

10.5.1 தேர்தல் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் நடைபெறும்.

10.5.2 பொதுக்கூட்டம் நடைபெறும் திகதியை நிர்வாகசபை 12 கிழமைக்கு முன் பொது அறிவித்தல் மூலம் பொதுமக்களிற்கும் ஆலோசனைசபைக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

10.5.3 பொதுக்கூட்டத்திகதி அறிவிக்கப்பட்ட திகதியில் இருந்து 2 வாரங்களுக்குள் ஆலோசனைசபை தேர்தலிற்கான திகதியையும் நியமனபத்திரம் தாக்கல் செய்யும் திகதியையும் வாக்காளர் பட்டியலையும் பொது அறிவித்தல் மூலம் தெரியப்படுத்த வேண்டும்.

10.5.4 தேர்தலிற்கு தேதி அறிவிக்கப்பட்டு, 4 வது கிழமை நியமனபத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு, ஆலோசனைசபையால் பரிசீலிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படும் நியமனபத்திரங்களின் பெயர் விபரங்கள் பொது மக்களிற்கு அறிவிக்கப்பட வேண்டும்.

10.5.5 நியமனப்பத்திரத்துடன் € 50 செலுத்தப்பட வேண்டும். மொத்த வாக்குகளில் 5 (5%) வீதத்திற்கு குறைவான வாக்கு பெறும் அபேட்சகர்களின் கட்டுப்பணம் திருப்பி செலுத்தப்படமாட்டாது. அது ஆலய நிதிக்கு வளங்கப்படும்.

10.5.6 தலைவர் செயலாளர் அல்லது பொருளாளர் பதவிகளிற்கு ஒருவர் மட்டும் நியமனபத்திரம் தாக்கல் செய்யும் பட்சத்து அவர் போட்டியின்று தெரிவு செய்யப்படுவர்.

10.5.7 தபால்மூல வாக்குகள் தேர்தல் நடைபெறும் திகதிக்கு முன் 1 வாரங்களிற்கு முன் முடிவு பெறும்.

10.5.8 தேர்தல் ஆலய வளாகத்தில் காலை 10.00 மணியில் இருந்து மாலை 06.00 மணி வரை நடைபெறும்.

10.5.9 வாக்குகள் அனைத்தும் பொதுக்கூட்டத்தன்று பொதுமக்கள் முன்னிலையில் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

10.5.10 வாக்குகள் சமமாக வந்தால் சீட்டு குலுக்கல் மூலம் முன்னுருமை வளங்கப்படும்.

## § 11. யாப்புமாற்றியமைப்பு

11.1 வருடாந்த பொதுக்கூட்டத்தில் சமூகம் அளித்த அங்கத்தவர்களில் மூன்றில் இரண்டு (2/3) பெரும்பான்மை வாக்குகளினால் மட்டுமே மன்றத்தின் யாப்பில் மாற்றம் செய்யப்படலாம்.

11.2 யாப்பு மாற்றம் அங்கத்தவர்களுக்கு ஆலயத்தில் பொதுஅறிவித்தல் மூலம் 2 வாரங்களின் முன் அறியத்தர வேண்டும்.

## § 12. பதவிவிலக்கல், ஆலோசனைசபை கலைப்பு, நிர்வாகசபை கலைப்பு, கலை, கலாச்சார அபிவிருத்திச்சபை கலைப்பு, நம்பிக்கையில்லாப் பிரேரணை, மன்றக்கலைப்பு

12.1 ஆலோசனைசபை அங்கத்தவரோ, நிர்வாகசபை அங்கத்தவரோ அல்லது கலை, கலாச்சார அபிவிருத்திசபை அங்கத்தவரோ நம்பிக்கையில்லாமல் பதவியில் இருந்து விலக்கப்பட்டால் அல்லது கருத்து முரண்பட்டு தானாக விலகினாலோ 3 வருடத்திற்கு ஆலோசனைசபையில், நிர்வாகசபையில் அல்லது கலை, கலாச்சார அபிவிருத்திசபையில் பதவி வகிக்க தடைசெய்யப்பட்டுள்ளது.

12.2 வருடாந்த பொதுக்கூட்டத்தை தவிர்ந்த அவசரப் பொதுக்கூட்டத்தில் ஆலோசனைசபையையோ நிர்வாகசபையையோ அல்லது கலை, கலாச்சார அபிவிருத்திச்சபையையோ தகுந்த காரணமின்றி கலைக்க முடியாது.

12.3 ஆலோசனைசபை மேல், நிர்வாகசபை மேல் அல்லது கலை, கலாச்சார அபிவிருத்திச்சபை மேல் பொதுமக்களிற்கு அவநம்பிக்கை ஏற்படும் பட்சத்தில், பொதுக்கூட்டத்தில் சமூகம் அளித்த மூன்றில் இரண்டு (2/3) அங்கத்தவர்களின் பெரும்பான்மை வாக்குகளினால் மட்டுமே ஆலோசனைசபையை நிர்வாகசபையை அல்லது கலை, கலாச்சார அபிவிருத்திச்சபையை கலைக்கமுடியும்.

12.4 அங்கத்தவர்கூட்டத்தில் சமூகம் அளித்தவர்களில் மூன்றில் இரண்டு (2/3) பெரும்பான்மை வாக்குகளினால் மட்டுமே மன்றத்தை முற்றாக செயலிழக்கச் செய்யலாம்.

12.5 இம்மன்றம் முற்றாக செயலிழக்கப்படும் பட்சத்தில் மீதப்படும் சொத்துக்கள், நிதிகள் நலன்புரிச்சங்கம் மூலமாக இலங்கையில் இருக்கும் சமூகசேவை, அனாதை இல்லங்களிற்கு நன்கொடையாக வழங்கப்படும்.

12.6 மன்ற அங்கத்தவர்கள் விலகும் போதும், விலக்கப்படும் போதும், மன்றம் முற்றாக செயலிழக்கும் போதும் மன்றத்தின் சொத்து, பணம் போன்றவை பகுதியாகவோ முழுமையாகவோ மீளப்பெறமுடியாது.

## § 13. பிறவிடயங்கள்

13.1 வழிபாட்டுதலத்தையும், அதன் சூழலையும் ஒழுங்குடனும், சுத்தமாகவும், வைத்திருக்க எல்லோரும் ஒத்துளைப்பு நல்க வேண்டும்.

13.2 ஆலயத்தின் உள்ளேயும், வெளியேயும், அதன் வாயில், அல்லது சுற்றுப்புறங்களிலும், அரசியல் கலந்துரையாடல் தவிர்க்கப்பட வேண்டும்.

13.3 அதே போன்று அரசியல் சம்பந்தமான துண்டுப்பிரசுரங்கள் விநியோகம், அரசியல் பிரச்சாரம் என்பனவும் தவிர்க்கப்பட வேண்டும். இந்த விதிகளை மீறும் பட்சத்தில் அவைகளை கட்டுப்படுத்தவும், அதுபற்றி அறிவுரை கூறவும் நிர்வாகசபையினருக்கு சகல உரிமையும் உண்டு.

13.4 இந்த மன்றத்தின் ஆலோசனைசபையின், நிர்வாகசபையின், கலை கலாச்சார அபிவிருத்திசபையின் செயல்பாடுகளின் தவறுகள், திருத்தங்கள், முறைப்பாடுகள் பற்றி தனிப்பட்ட ரீதியில் அங்கத்தவரிடம் முறையிடப்படுவது தவிர்க்கப்படுகிறது. முறைப்பாடுகளை அதற்காக வைக்கப்பட்டிருக்கும் தகவல் பெட்டிக்குள் எழுதி போடலாம் அல்லது அங்கத்தவர்கூட்டத்திலோ, பொதுக்கூட்டத்திலோ தகுந்த ஆதாரத்துடன் எடுத்து கூறுவதற்கும், கலந்துரையாடுவதற்கும் சகல உரிமையும் அளிக்கப்படுகிறது.